## 140. இதுவரை நடத்தி வந்த

### பல்லவி

இதுவரை நடத்தி வந்த பலத்த துருகமே
இதுவரை காத்து வந்த ஓங்கிய புயமே

### அனுபல்லவி

பகலினிலே மேக ஸ்தம்பமாக
இரவினிலே அக்கினி ஸ்தம்பமாக

### சரணங்கள்

1. வனாந்திரத்தில் தண்ணீர் தந்தீரே
   கன்மலையை உடைத்து கொண்டுவந்தீரே
   - இதுவரை நடத்தி

2. தூதர்களின் உணவான மன்னாவையே
   வானத்திலிருந்து பொழிந்து விட்டீரே
   - இதுவரை நடத்தி

3. மாராவின் தண்ணீரை மதுரமாக்கினீர்
   ஜனங்களின் தாகத்தை தீர்த்து விட்டீரே
   - இதுவரை நடத்தி